# வீணாம்ருத ஸரஸ்வதி கீர்த்தனை

ஸதுர்வேத நாயகனின் நாயகியே
வெண்தாமரை மலர் மீது இருப்பவளே-
நிலையான கல்வியாவும் தருபவளே
நிர்மலமாய் என்மனதில் இருப்பவளே (1)

புவியெங்கும் உனைத்தொழுவோம் நவமியிலே
புரட்டாசி மாதம் வரும் திதியினிலே
எவ்வுலகும் போற்றுகின்ற நான்முகன் தேவி
என்மனதில் நீயிருந்து எனை ஆதரி (2)

பார்புகழும் உன்நாமம் கலைமகளே
பாவேந்தர்நாவினிலே நீ துணையே
போற்றிடுவோம் உன் நாமம் எந்நாளுமே
பேரானந்த வாழ்வு தரும் ஸாரதயே (3)

வெண்பட்டு ஆடையினை தரித்தவளே
வெள்ளமாய் ப்ரவாகிக்கும் கல்விஞானமே
கூத்தனூரில் நீயிருந்து அருள்கின்றாய்
கூப்பிட்டோம் உனைஇந்த ஸந்நிதிக்கே (4)

பஞ்சமுக க்ஷேத்ரம் வாழ் ஸரஸ்வதியே
பறந்தோடி வந்து ஞானம் தந்தனையே
கொண்டைகடலையுடன் வெண்புஷ்பம் சேர்த்தாலே
கோடானுகோடி இன்பம் தருவாயே (5)

உன் குருவாம் ஹயக்ரீவ மூர்த்தியுமே

பஞ்சமுக ஸந்நிதியில் ஒருமுகமாய் ஆனாரே
ஞானத்தின் ஞானகுரு ஹயக்ரீவா
ஞாலம் போற்ற வரம் கொடுத்த ஹயக்ரீவா (6)

கீர்த்தியினை அளித்திட்ட கலைமகளே
கிழித்திட்டாய் கெட்டபுத்தி இனி இல்லையே
வேகவதியாய் நீவந்த இடத்தினிலே
வேண்டும் வரம் தருகின்றார் மஹாவீரரே (7)

நாக்கினில் நீயிருந்து நடம் புரிந்திடவே
நாவினிக்க பாடுகின்றேன் உன் புகழே
இங்கிருந்து என்றென்றும் அருள்பவளே
ஈடில்லை உன் கருணை என் சொல்வேன் (8)

புத்ரர்க்கு கல்வி ஞானம் தந்தனையே
புவி புகழ அவர்கள் வாழ்வை மாற்றினையே
தேனினிக்கும் உன் திருவதனம்தனை கண்டு
தேட வேண்டாம் எங்கேயும் இங்குண்டு (9)

வாக்தேவி ஸத்யவாக்தேவி என்றும்
வித்தைகளை அருளிடும் வித்யாதேவி
விரும்பும் கல்விதனை தரும் தேவி
வீடுனக்கு ஸத்யலோகம் ப்ரம்ஹபத்னி (10)

நாரதனின் தாயான நான்முகன் தேவி
ப்ரம்ஹலோகம் ஆள்கின்ற வாக்தேவி
வீணைகினை மீட்டுகின்ற வித்யாதேவி
சுவடியினை ஏந்தியுள்ள ஸரஸ்வதி தேவி (11)

பக்தியுடன் நாம் படித்தாள் பலன் தருவாள்
பண்பினையும் சேர்த்து உடன் வளர்த்திடுவாள்
ஸாந்தம் தவழும் அவள் வதனம் பார்த்தாலே

ஸந்தோஷம் வாழ்வினிலே பொங்கிடுதே (12)

கலைகளின் இருப்பிடமாம் அவள் முகமே
கண்ணார கண்டாளே கிடைத்திடுமே அவள்
பாதாரவிந்தம் தனைப்பார்த்தாலே என்றும்
ப்ரவாகமாக பெருக செய்வாள் நம்மையுமே (13)

வேதங்கள் காக்கின்ற நான்முகனின்
நாவினில் என்றென்றும் வாழ்பவளே
வேண்டுவோர் வேண்டும்வரம் தந்திடுவாள்
வருவீர் இந்த பஞ்சமுக ஸந்நிதிக்கே (14)

ஸ்வாதியே ஸரஸ்வதிக்கு உகந்த தினம்
ஸகலர்க்கும் வாழ்வளித்து வளம் தருவாள்
திருமாலின் மருமகளாய் திகழ்பவளே
ஹயக்ரீவர்க்கு சிஷ்யையான கலைமகளே (15)

சீடர்க்கு சீடரான எனையென்றும் நீ
சிறப்புடன் வாழவைத்து காத்திடுவாய்
நவராத்ரியில் கொலுவிருக்கும் ஸாரதயே
நங்கையிவள் நாவினில் நர்த்தனம் புரிந்தாயே (16)

பஞ்சமுக கேஷத்ரத்தில் பவனிவரும்
பவித்ரமான தெய்வமே உனைபணிந்தேன்
இங்கிருந்து அனைவரையும் காத்து நீயும்
இன்பமாய் வாழவைப்பாய் தினம் நீயே. (17)

**மங்களம்**